DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**OS. No. 2/2019**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | DW2 |
| Name | : | எஸ். குமார் |
| Father's / Husband's Name | : | சாரங்கபாணி |
| Age | : | 42 |
| Religion | : | |
| Calling | : | |
| Caste | : | |
| Village | : | |
| Date | : | 18.04.2022 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் சிவில் பி டெக் படித்துள்ளேன். எனக்கு தாவா சொத்தை தெரியும். தாவா சொத்தை மதிப்பீடு செய்வதற்காக வழக்கறிஞர் திரு. அ.கோ.அண்ணாமலை என்பவர் அழைத்திருந்தார். 1ம் வாதி பழனி என்பவர் என்னை அழைக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 அறிக்கை நான் கொடுத்தது தான். ஆனால் மேற்படி ஆவணம் நான் வழக்கு சம்மந்தப்பட்ட நீதிமன்ற விசாரணைக்காக கொடுக்கவில்லை தரப்பினர்களின் வாடகை பிரச்சனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டது. எனது அறிக்கையில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் அங்கிருந்த நபர்கள் சொன்னதின் பேரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கட்டிடம் யார் கட்டினார்கள் என்று எனக்கு தெரியாது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வழக்கறிஞர் திரு. அ.கோ.அண்ணாமலை அழைத்தன் பேரில் தான் தாவா சொத்திற்கு சென்றேன். வாதிகள் என்னை அழைக்கவில்லை. அவர்கள் நான் போன போது தாவா சொத்தில் இருந்தார்களா என்று எனக்கு தெரியாது. அங்கிருந்த 2 நபர்கள்

தான் கட்டிடம் கட்டிய விவரத்தையும் மண் கொட்டிய விவரத்தையும் என்னிடம் சொன்னார்கள். ஆனால் வழக்கறிஞர் திரு.அ.கோ.அண்ணாமலை மண் கொட்டிய மற்றும் கட்டிடம் கட்டிய விவரத்தை பற்றி எதுவும் சொல்லவில்லை. நான் தாவா சொத்தை ஆய்வு செய்து அறிக்கை கொடுக்கவில்லை. அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சொத்தின் நீளம், அகலம், கட்டிடத்தின் அமைப்பு மற்றும் தன்மை ஆகியவை மேற்படி 2 நபர்கள் சொன்னதின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தொகை தோராயமானது ஆகும்.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH